**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் :198/மா/2023**

**நாள் : 04/09/2023**

திரு.மோ.மி.தனுஷ்குமார்,
கன்னியாகுமரி – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
நாகர்கோவில் மாநகராட்சி
நாகர்கோவில் – எதிர்மனுதாரரர்

கன்னியாகுமரி, இடலாக்குடி, பட்டாரிலர் கோவில் தெரு, 13/7, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மோ.மி.தனுஷ்குமார் என்பவரின் 30.06.2023 நாளிட்ட மனு 03.07.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 198/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

கன்னியாகுமரி, இடலாக்குடி, பட்டாரிலர் கோவில் தெரு, 13/7, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மோ.மி.தனுஷ்குமார் அவர்கள் தனது 30.06.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் குழிகள் தோண்டப்பட்டு குழாய் அமைக்கப்பட்டது. அதில் குழாய் அமைத்த பின் மீதமான மண் மாநகராட்சிக்கு சொந்தமான ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மைதானம் /பொருட்காட்சி மைதானத்தில் (ஹிந்து கல்லூரி அருகில்) கொட்டி குவித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த மண்ணை அப்புறப்படுத்திட 06.06.2022 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் தேரிவிளை பகுதியை சார்ந்த ஒரு ஒப்பந்ததாரருக்கு நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள மைதானத்தில் மொத்தம் 15870 Cu.m. அதாவது 5608 யூனிட் மண்ணை அப்புறப்படுத்த ஒப்பந்த தொகையாக ரூ.23,10,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து பத்தாயிரம் மட்டும்) ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதாகவும், அதன்படி 18.11.2022 வரை ரூ.18,70,395/– (ரூபாய் பதினெட்டு லட்சத்து எழுபதாயிரத்து முன்னூற்றி தொன்னூற்றி ஐந்து மட்டும்) ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கான மாமன்ற தீர்மானம் எண்.401, நாள் 30.08.2022 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005ன் கீழ் கோரிய மனுவிற்கு, மாநகராட்சி சார்பாக

ந.க.எண்.16048/2022/த.அ.உ.ச. நாள் 19.12.2022 மூலம் மனுதாரர் ஆகிய எனக்கு தெரிவிக்கப்பட்டது.

பொது இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட மண் பொது சொத்து ஆகும். அதை நாகர்கோவில் மாநகராட்சி ரூ.23,10,000/– க்கு ஒப்பந்தமிட்டு ரூ.18,70,395/–க்கு (18.11.2022) வரை செலவு செய்து அப்புறப்படுத்தியிருப்பது பெரிய நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளது. கரும்பு திங்க கூலியா என்பதற்கு ஏற்ப நாகர்கோவில் மாநகராட்சியின் இச்செயல் சந்தேகத்தை தூண்டுகிறது. வீட்டு கட்டுமானம் தொடங்கி பல தேவைக்காகவும் தரம் பிரிக்கப்பட்டு மண் நல்ல இலாப நோக்கில் விற்கப்படுகிறது. தனி நபரால் இலாபத்தில் விற்கப்படும் ஒரு பொருளை மாநகராட்சி நிர்வாகம் தனக்கு நிதி இழப்பை ஏற்படுத்தி அப்புறப்படுத்தியிருப்பது மேலும் சந்தேகத்தை வலுவடைய செய்கிறது.

பண இழப்பு ஏற்படுத்தி அப்புறப்படுத்திய மண்ணை குறைந்த விலைக்கு விற்று இருந்தாலே மாநகராட்சிக்கு நிதி இழப்பை தவிர்த்து வருவாய் ஈட்டியிருக்க முடியும். மேலும் மாநகராட்சி புதிய கட்டிடம் தற்போது அமைந்து இருக்கும் இடத்தை மேடாக்கவும்/சமன்படுத்தவும் 814.61 யூனிட் மண் தேவைப்பட்டதாகவும் மற்றொரு RTI மனுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதற்காக பொருட்காட்சி மைதானத்தில் கொட்டி வைக்கப்பட்ட மண் பயன்படுத்தியிருந்தால், அந்த 814.61 யூனிட் மண்ணுக்கான செலவு தவிர்த்து இருக்க முடியும். மாநகராட்சியின் பல பணிகளும் நிதி பற்றாக்குறையால் முடிவடையாமல் இருக்கும் இந்நிலையில் நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டு அவசரமாக செயல்பட்டு நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மாநகராட்சி சார்பாக எனது RTI மனுவிற்கு தவறான தகவல்களை தந்திருப்பதும் tnurbantree.tn.gov.in என்ற இணையதளத்தில் கிடைத்த தகவல்கள் மூலம் தெளிவடைந்தது. எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் இதனை ஆராய்ந்து தவறுகளை கண்டறிந்து, பொறுப்பான அதிகாரி மீது கடும் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 17.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு வருமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4. மனுதாரர் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது எழுத்துபூர்வ வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்பித்துள்ளார்:**

" நாகர்கோவில் மாநகராட்சிக்கு எதிராக நான் வழங்கிய மனுவில் மாநகராட்சி செய்துள்ள விதிமுறை மீறல்களையும், ஊழல்களையும் தங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கின்றேன்.

நாகர்கோவில் மாநகராட்சி ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மைதானத்தில் நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெற்ற பிற பணிகளில் இருந்து எடுக்கப்பட்ட மண்ணை அப்புறப்படுத்துவதற்கு கோரப்பட்ட ஒப்பந்த புள்ளியில் நடைபெற்ற விதி மீறல் மற்றும் ஊழல்.

1. இந்த ஒப்பந்த பணிக்கு ஒப்பந்த விதிமுறைகளின்படி, அதாவது Tamilnadu Tender Transparency Act. 1998–ன்படி ஒப்பந்த புள்ளி கோரவில்லை. மாறாக விலை புள்ளிகோரப்பட்டுள்ளது. விலைப்புள்ளியும் ஒப்பந்த விதிமுறைகளின்படி கோராமல், தனக்கு விருப்பமான ஒப்பந்ததாரிடம் இருந்து விலைப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு சட்ட விதி எண்.15ஐ முன் உதாரணம் காட்டியுள்ளார்கள். அதையும் மாமன்றம் முன் அனுமதி மூலம் அனுமதி வழங்கியுள்ளது. ஒப்பந்த விதிமுறைகளின்படி ஒப்பந்தம் கோரியிருக்க வேண்டும். கோரப்படும் ஒப்பந்தம் மின்னனு முறையில் கோரியிருக்க வேண்டும். மாவட்ட செய்தி மலர் மற்றும் மாவட்டத்தின் செய்தி தாள்களில் பிரசுரம் செய்திருக்க வேண்டும். இவைகளை செய்வதற்கு மாறாக சட்ட விதி எண்.15ஐ பயன்படுத்தி உள்ளது. சட்டவிதி எண்.15 இதற்கு பொருந்தாது.(i. இச்சட்டத்திற்கான நகலை இணைத்துள்ளேன்). ஏன் எனில் சட்ட விதி எண் 15 என்பது அவசரகாலகட்டங்களில் தற்காலிக பணிகளை மட்டுமே செய்ய இயலும். நிரந்தர பணி என்பது திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் (Planning & Execution) மூலமாகவே பொறியியல் துறையால் மட்டுமே செயல்படுத்த முடியும். அது செய்வதற்கான உயர்ந்தபட்ச கட்டணம் ரூ.50 மட்டுமே செலவு செய்ய இயலும். அச்சட்டம் தற்போது செயல்பாட்டில் இல்லை. அச்சட்டத்தின்படி பார்த்தாலும், உதவிப்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் நேரடியாக பணி செய்வதற்கு அச்சட்டத்தில் வழிவகை உள்ளது. ஆனால் இப்பணியில் ஒப்பந்ததாரரை நேரடியாக பணி செய்ய அனுமதித்துள்ளார்கள். இச்சட்டத்தின்படி மாமன்றத்தின் முன் அனுமதி தேவை இல்லை. ஆனால் இந்தப்பணியில் மாமன்றம் தானாக முன்வந்து முன் அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் அவசரகால பணிக்கு பணித்தொகை (Estimate amount) கண்டறிய முடியாத நிலையில் பணித்தொகையை மாமன்றம் குறிப்பிட்டு முன் அனுமதி வழங்கியுள்ளது. மேலும் இப்பணிக்கு Convenience charge ஒப்பந்ததாருக்கு வழங்கப்பட்டுள்ளது தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் தெரிய வருகிறது. Convenience charge வழங்கப்பட்டுள்ளதால் ஒப்பந்ததாரர் மண்ணை இடமாற்றும் இடத்தை மாநகராட்சி நிர்வாகம் முன்கூட்டியே அறிந்துள்ளதாக தெரிகிறது. இந்த மண் இடம் மாற்றுவதற்கு மாவட்ட கனிமவளத்துறையிடம் இருந்து மாநகராட்சி நிர்வாகமோ ஒப்பந்ததாரரோ எந்த அனுமதியும் பெற்றதாக தெரியவில்லை. மாநகராட்சி அவசரகாலப்பணி என்று கூறி அதற்கான வேலை உத்தரவை 06.06.2022 அன்று வழங்கி (ii. மாநகராட்சி வழங்கிய தகவல் அறியும் உரிமை சட்ட தகவல்படி உறுதிப்படுத்தப்பட்டது), அதற்கு காசோலையை மட்டும் 18.11.2022 அன்று (iii. மாநகராட்சி வழங்கிய தகவல் அறியும் உரிமைச்சட்ட தகவல் படி உறுதிப்படுத்தப்பட்டது). வழங்கி உள்ளது. ஒப்பந்த நிபந்தனையின்படி ஒப்பந்ததாருக்கு பணி முடிந்த 28 நாட்களுக்குள் காசோலை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இப்பணிக்கு பணிஉத்தரவு வழங்கிய நாளில் இருந்து காசோலை வழங்கிய நாள் வரை சுமார் 5 மாதங்கள் இருப்பதால், சுமார் நான்கு மாதங்கள் பணி நடைபெற்றதாக தெரிகிறது. அப்படி இருக்க இது எவ்வாறு அவசரகால பணியாக எடுத்துக்கொள்ளமுடியும்.

2. இது ஒரு திட்டப்பணி, அவசர கால பணி என்பது முன் திட்டமிடாமல் அவசர தேவைக்கு செய்யக்கூடிய பணியாகும். மேலும் அவசரகால பணிக்காக பணி

தொகை என்பது பணி முடிந்த பின்பே தெரிய வரும். ஆனால் இந்த பணி திட்டமிட்டே செயல்படுத்தப்பட்டுள்ளது.

3. இச்சட்டத்தின் மூலம் எப்பணியும் செயல்படுத்த கூடாது என்பதை உறுதிபடுத்தும் விதமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளர் அவர்கள் நாகர்கோவில் நகராட்சியில் பணிபுரிந்த பொறியாளர் திரு.சுரேஷ்குமார், இளநிலைப்பொறியாளர் திருமதிலதா, பணி ஆய்வாளர் திரு.செல்வமணி ஆகியோருக்கு கட்டாய ஒய்வு வழங்கப்பட்டுள்ளது. அதை உறுதிப்படுத்தும் விதமாக பணி ஆய்வாளர் திரு.செல்வமணி அவர்களுக்கு வழங்கிய charges form நகலை இத்துடன் இணைத்துள்ளேன்.(iii. Charges form நகல் இணைப்பு).

4. நாகர்கோவில் மாநகராட்சி தீர்மானம் 480ல் குறிப்பிட்டுள்ளபடி இப்பணிக்கு அகற்றப்படும் மண் குவியல் என்பது நாகர்கோவில் மாநகராட்சியின் பல இடங்களில் இருந்து பெறப்பட்ட மண் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (iv. இணையவழியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தீர்மான நகல் இணைக்கப்பட்டுள்ளது.) அப்படி இருப்பின் பல பணிகளில் இருந்து பெறப்பட்ட மண்ணை இம்மைதானத்தில் சேர்த்து குவித்து வைக்கப்பட்டுள்ளது என்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அப்படி எனில் எந்த எந்த பணிகளில் இருந்து மண் எடுக்கப்பட்டதோ அந்த பணிகளின் ஒப்பந்ததாருக்கு இந்த மண்ணை அப்புறப்படுத்த convenience charge வழங்கப்பட்டிருக்கும். தற்போது மண்ணை சேமித்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்த மீண்டும் convenience charges வழங்கப்பட்டுள்ளது தகவல் அறியும் உரிமைச்சட்ட தகவல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரே பணிக்கு இரண்டு முறை convenience charge வழங்கப்பட்டுள்ளது உறுதியாகிறது. அதன் மூலம் மாநகராட்சி பொறியாளர் பணி செய்யவில்லை திட்டமிடவில்லை என்பது உறுதியாகிறது.

5. நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளின் தேவைகளுக்கு செம்மண் சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தே வருகிறது. அதன் உத்தேச தொகை 2.83 Cu.m. (ஒரு யூனிட்) கொள்ளவு கொண்ட டெம்போவிற்கு ரூபாய் 5000 வருகிறது. நாகர்கோவில் மாநகராட்சி 15870 meter cube மண்ணை அகற்றியதாக தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் தெரிகிறது. அதன்படி பார்த்தால் ஒரு டெம்போ மண் என்பது 2.83 Cu.m. ஆகும். மொத்த மண் 5607 டெம்போக்கள் வருகிறது. 40 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து கொண்டு வரும் மண்ணிற்கு 5000 ரூபாய் உத்தேசம் என்றால் அந்த தொலைவிற்கான வண்டி வாடகையை கழித்து மண்ணிற்கு உத்தேசமாக 2000 ரூபாய் விலை போட்டாலும் மொத்த மண்ணிற்கான தொகை குறைந்தபட்சம் 1,12,14,000/– (ரூபாய் ஒருகோடியே பன்னிரண்டு லட்சத்து பதிநான்காயிரம் மட்டும்) வருகிறது. இதை மாநகராட்சி நிர்வாகம் கையாடல் செய்யும் எண்ணத்துடன் மண்ணின் மதிப்பை மறைத்து மண்ணிற்கான வருவாய் அரசிற்கு வருவதை மறைக்க வேண்டும் என்றே அவசர அவசரமாக அவசர பணி என காரணம் கூறி அரசின் ஒப்பந்த விதிகளை மீறி ரூபாய் 23,10,000/– மாமன்ற அனுமதி வழங்கி ரூபாய் 18,70,395/–க்கு காசோலை ஒப்பந்ததாரக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர், ஆணையர், மற்றும் பொறியாளர் ஆகியோர்

உடந்தையாக இருந்துள்ளனர் என்பதை தங்களுக்கு பணிந்து தெரியப்படுத்துகிறேன். அதற்கான ஆவணங்களை இதில் இணைத்துள்ளேன் " என தெரிவித்துள்ளார்.

5. **நாகர்கோவில் மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் 21.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:**

" நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெற்ற பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெறும்போது அங்கு வெட்டப்பட்ட குழிகளிலிருந்து எடுக்கப்பட்ட மண் அப்போதைய நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் அவர்களின் வாய்மொழி உத்தரவிற்கேற்ப ஸ்ரீ அவிட்டம் திருநாள் மகாராஜா மைதானத்தில் கொட்டப்பட்டது. மேற்கண்ட மண் குவியலை அகற்றுவதற்கான போக்குவரத்து செலவான ரூபாய் 23 இலட்சத்து 10 ஆயிரம் செலவு செய்ய மன்றத் தீர்மானம் 481 நாள் 30.08.2022ல் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் ஒப்பந்தத் தொகையான ரூ.23,10,000/—ல் மேற்கண்ட பணியை செய்த வகையில் ரூபாய் 18,70,395/— மட்டும் ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட மகாராஜா ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மாநகராட்சி காப்பக மைதானத்தில் மேற்கண்ட மணல் குவியல் அகற்றப்பட்டதால், அங்கு வாகன நிறுத்துமிடம், பொருட்காட்சி மற்றும் சர்க்கஸ் போன்ற நிகழ்ச்சிகளை தனியாரால் செய்த வகையில் அவற்றிற்கான வாடகை என்கின்ற வகையில் ரூபாய் 1,44,82,553/— மாநகராட்சிக்கு வருவாய் கிட்டியுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து அதன் விவரங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் அளிக்கப்படும் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் 18.08.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. **நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 18.08.2023 நாளிட்ட எதிருரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கும் சட்டத்திற்கும் புறம்பானதாகும். மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் மறுக்கப்படுகின்றன. பொதுவாக சாலை சீர்திருத்த பணியில் வரப்படும் உபரி மண்ணை நாகர்கோவில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, மாநகராட்சிக்கு சொந்தமான தாழ்வான பகுதிகளில், சாலை சீர்திருத்தும் ஒப்பந்ததாரர்களால் கொட்டப்படும். அவ்வாறு மண் எடுத்து கொட்டுவதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு கூலி கொடுக்கப்படும். கூலியில்லாமல் எந்த ஒப்பந்ததாரர்களும் தங்கள் செலவில் சாலையை சீர்திருத்தும்போது சேரும் உபரிமண்ணை நகராட்சிக்கு சொந்தமான தாழ்வான பகுதிகளில் கொட்டுவதில்லை.

அவ்வாறு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சாலை சீர்திருத்தம் செய்யும் ஒப்பந்ததாரர்கள், உபரிமண்ணை எவருடைய அனுமதியுமின்றி மாநகராட்சிக்குரிமைப்பட்ட தாழ்வான இடங்களில் கொட்டுவதற்கு பதிலாக அவர்களுக்கு விருப்பப்பட்ட இடத்திற்கு மண்ணை கொண்டு செல்வதாக புகார் மனு வரப்பெற்றது. அத்தகைய சீர்கேட்டினை தடுக்கும் நோக்கத்துடன், அப்போதைய மாநகராட்சி ஆணையரின் வாய்மொழி உத்தரவின் பெயரில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் குழிகள் தோண்டப்பட்டு குழாய் அமைத்த பின் மீதமான

உபரி மண்ணை மாநகராட்சிக்கு சொந்தமான ஹிந்து கல்லூரி அருகில் அமைந்துள்ள பொருட்காட்சி மைதானம்/ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மைதானத்தில் கொட்டி வைக்கப்பட்டது.

ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மைதானத்தில் நகரம் முழுவதும் சேகரமாகும் மண்குவியல்கள் கொட்டப்பட்டு, மைதானம் நிரம்பி காணப்பட்டதால், மேயர் அவர்களும் ஆணையர் அவர்களும் கள ஆய்வு மேற்கொண்டபோது, மண் குவியலினால் மைதானம் உபயோகப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் உடனேயே அம்மண் குவியல்களை அப்புறப்படுத்த தெரிவித்தனர். அவ்வாறு அந்த மைதானத்தில் கொட்டி வைக்கப்பட்ட மண் குவியலினை அம்மைதானத்தின் எதிரேயுள்ள சரலூர் மாட்டுச்சந்தையில் வணிகவியல் கட்டடம் கட்ட உள்ளதால் அதன் பள்ளமான இடத்தில் கொட்ட உத்தரவிடப்பட்டது. மேலும் வலம்புரிவிளை உரக்கிடங்கின் மத்திய பகுதியில் அந்த மண்ணினை கொட்டி ஒரு புதிய பாதை உருவாக்க உத்தரவிடப்பட்டது.

அவ்வாறு மேற்கூறிய மைதானத்திலிருந்து மேற்படி சரலூர் மாட்டுச்சந்தையின் தாழ்வான பகுதியிலும் வலம்புரிவிளை உரக்கிடங்கின் மத்தியிலும் மண்ணினை மாற்றி கொட்டுவதற்கும் எவரும் தானாக முன்வரமாட்டார்கள். கூலியின்றி எவரும் அப்பணியினை தனித்து செய்ய இயலாது. எனவே அப்பணியினை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஜோசப் அருள்ராஜ், மணிகண்டன், கைலாஷ்குமார் ஆகியோர் முறையே ரூபாய் 24,75,720/--, 23,80,500/--, 20,35,327/-- கோரினார்கள். அதில் கைலாஷ்குமார் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்ததால் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி ரூ.19,13,287.20/-- என சம்மதித்து ஒப்பந்தம் போடப்பட்டது. பின்னர் மேற்படி நபருக்கு மாமன்ற தீர்மானம் எண்.481 நாள் 30.08.2022ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டது.

அந்த பணி உத்தரவின்படி மேற்படி கைலாஷ்குமார் மேற்படி மைதானத்திலிருந்து மொத்தம் 15866.42 Cu.m. (5606.50 யூனிட்) மண்ணை அப்புறப்படுத்தி மேலே குறிப்பிட்டுள்ளபடி சரலூர் மாட்டுச்சந்தையிலும், வலம்புரிவிளையிலும் கொட்டி சமன்படுத்தினார். அதற்கு அவருக்கு மொத்தம் ரூ.18,70,395/-- 18.11.2022 அன்று கொடுக்கப்பட்டது. மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய மனுவிற்கு உரிய பதில் கொடுக்கப்பட்டது.

பொது இடத்திலிருந்து எடுக்கப்பட்ட மண் பொது சொத்து என்பது மறுக்கப்படாத உண்மை. அந்த மண் பொது இடத்தில் தான் கொட்டப்பட்டுள்ளது. அவ்வாறு கொட்டுவதற்கு கூலி கொடுக்காமல் எவரும் இலவசமாக அப்பணியினை செய்து தர மாட்டார்கள். எனவே தான் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. அதில் எவ்வித நிதி இழப்பும் ஏற்படவில்லை. மனுதாரர் வேண்டுமென்றே " கரும்பு தின்ன கூலியா " எனக்கூறியுள்ளார். அவ்வாறு அவர் நினைத்திருந்தால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டபோது அவர் தான் இலவசமாக செய்து தருவதாக கூறி மாநகராட்சி ஆணையரை சந்தித்து தன் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பித்திருக்கலாம். மாநகராட்சியின் இச்செயலில் எவ்வித சந்தேகமும் எழ வாய்ப்பில்லை.

மனுதாரர் பத்தி 3ல் கூறியிருப்பது ஏற்புடையதல்ல. வீட்டு கட்டுமானத்திற்கு மண் விற்கப்படுவதற்கும், மைதானத்திலிருந்து மண்ணை எடுத்து மாநகராட்சிக்கு சொந்தமான சரலூர் மாட்டு சந்தையின் பள்ளமான பகுதியிலும் வலம்புரிவிளையில் கொட்டி சமன்படுத்தியதற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. பொது மண் விற்கப்படவில்லை. ஒரு இடத்திலிருந்து எடுத்து மற்றொரு இடத்தில் கொட்டுவதற்கான கூலிதான்

கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு எவ்வித நிதியிழப்பும் ஏற்பட வாய்ப்பு இல்லை. மனுதாரர் பொய்யான தகவல்களை கூறி பொய்யான புகாரினை கொடுத்துள்ளார்.

மாநகராட்சிக்கு மண்ணை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய மாநகராட்சி சட்டவிதிமுறைகளின்படி அதிகாரமில்லை. அவ்வாறு விற்பனை செய்வது சட்டத்திற்கு புறம்பானதாகும். சட்டத்திற்கு புறம்பான செயல்களை செய்து மாநகராட்சி வருவாய் ஈட்ட இயலாது. மனுதாரர் கூறியிருப்பது போல அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் கலைவாணர் கலையரங்கத்தில் மாநகராட்சியின் புதிய கட்டிடம் கட்ட அவ்விடத்தை சமன்படுத்த 814.61 யூனிட் மண் தேவைப்பட்டது. அந்த 814.61 யூனிட் மண்ணை மாநகராட்சி செலவு செய்து வாங்கவில்லை. சாலை பராமரிப்பின்போதும் பாதாள சாக்கடை தோண்டப்பட்டபோதும் கிடைக்கபெற்ற மண்ணினை அப்பணி செய்த ஒப்பந்ததாரர்கள் வாயிலாக நேராக புதிய கட்டிடம் கட்டப்பட்ட இடத்தில் கொட்டப்பட்டது. அந்த ஒப்பந்ததாரர்களுக்கு அதற்கான conveyance கூலி மட்டும் கொடுக்கப்பட்டது. நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் எவ்வித நிதி இழப்பையும் ஏற்படுத்தவில்லை. மனுதாரர் பொய்யான புகாரினை தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரரின் RTI மனுவிற்கு தவறான தகவல்கள் கொடுக்கப்படவில்லை. மனுதாரர் RTI மனுவின் பதிலுக்கு மேல் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் வேண்டுமென்றே நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகத்தின் மீது ஏதோ காழ்ப்புணர்ச்சி கொண்டு நிர்வாக நடைமுறைகளை தவறாக சித்தரித்துள்ளார். பல மனுக்கள் கொடுத்து நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகத்திற்கு தேவையில்லாத அலைச்சலும் சங்கடமும் ஏற்படுத்தி வருகிறார். மனுதாரர் அவருடைய புகாரில் கூறப்பட்டுள்ளவற்றை நிரூபிக்க கடமைப்பட்டவராவார். பொய்யான புகார் என தெரிய வந்தால் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள பணிந்து வேண்டுகிறேன்.

இந்த புகார் அடிப்படையில்லாததும், பொய்யான தகவல்களை கொண்டதுமாகும். எனவே மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மேற்படி புகார் மனுவினை ஆராய்ந்து, பொய்யான புகார் என கண்டறிந்து மனுதாரர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிந்து வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தமைக்கு மனுதாரர் நஷ்டஈடு கட்ட கடமைப்பட்டவராவார்.

மேற்படி புகார் பொய்யான புகார் மனுவாகும். எனவே அதனை தள்ளுபடி செய்து மனுதாரருக்கு தகுந்த தண்டனை வழங்குமாறு பணிந்து வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், நாகர்கோவில் மாநகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் நாகர்கோவில் மாநகராட்சி ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மைதானத்தில் நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெற்ற பிறபணிகளில் இருந்து எடுக்கப்பட்ட மண்ணை அப்புறப்படுத்துவதற்கு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் விதி மீறல் மற்றும் ஊழல் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டு இதில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் உடந்தையாக இருந்துள்ளனர் எனக்குறிப்பிட்டுள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் " நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெற்ற பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெறும்போது அங்கு வெட்டப்பட்ட குழிகளிலிருந்து எடுக்கப்பட்ட மண் அப்போதைய நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் அவர்களின் வாய்மொழி உத்தரவிற்கேற்ப ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மைதானத்தில் கொட்டப்பட்டது. மேற்கண்ட மண் குவியலை அகற்றுவதற்கான போக்குவரத்து செலவான ரூபாய் 23 இலட்சத்து 10 ஆயிரம் செலவு செய்ய மன்றத் தீர்மானம் எண்.481 நாள் 30.08.2022ல் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் ஒப்பந்தத் தொகையான ரூ.23,10,000/–ல் மேற்கண்ட பணியை செய்த வகையில் ரூபாய் 18,70,395/– மட்டும் ஒப்பந்ததாருக்கு அளிக்கப்பட்டது. மேற்கண்ட மஹாராஜா ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மாநகராட்சி காப்பக மைதானத்தில் மேற்கண்ட மணல் குவியல் அகற்றப்பட்டதால், அங்கு வாகன நிறுத்துமிடம், பொருட்காட்சி மற்றும் சர்க்கஸ் போன்ற நிகழ்ச்சிகளை தனியாரால் செய்த வகையில் அவற்றிற்கான வாடகை என்கின்ற வகையில் ரூபாய் 1,44,82,553/– மாநகராட்சிக்கு வருவாய் கிட்டியுள்ளது என தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் பொதுவாக சாலை சீர்திருத்த பணியில் வரப்படும் உபரிமண்ணை நாகர்கோவில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, மாநகராட்சிக்கு சொந்தமான தாழ்வான பகுதிகளில், சாலை சீர்திருத்தும் ஒப்பந்ததாரர்களால் கொட்டப்படும். அவ்வாறு மண் எடுத்து கொட்டுவதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு கூலி கொடுக்கப்படும். கூலியில்லாமல் எந்த ஒப்பந்ததாரர்களும் தங்கள் செலவில் சாலை சீர்திருத்தும்போது சேரும் உபரிமண்ணை நகராட்சிக்கு சொந்தமான தாழ்வான பகுதிகளில் கொட்டுவதில்லை.

அவ்வாறு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சாலை சீர்திருத்தம் செய்யும் ஒப்பந்ததாரர்கள், உபரிமண்ணை எவருடைய அனுமதியுமின்றி மாநகராட்சிக்குரிமைப்பட்ட தாழ்வான இடங்களில் கொட்டுவதற்கு பதிலாக அவர்களுக்கு விருப்பப்பட்ட இடத்திற்கு மண்ணை கொண்டு செல்வதாக புகார் மனு வரப்பெற்றது. அத்தகைய சீர்கேட்டினை தடுக்கும் நோக்கத்துடன், அப்போதைய மாநகராட்சி ஆணையரின் வாய்மொழி உத்தரவின் பெயரில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் குழிகள் தோண்டப்பட்டு குழாய் அமைத்த பின் மீதமான உபரிமண்ணை மாநகராட்சிக்கு சொந்தமான ஹிந்து கல்லூரி அருகில் அமைந்துள்ள பொருட்காட்சி மைதானம்/ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மைதானத்தில் கொட்டி வைக்கப்பட்டது.

ஸ்ரீ அவிட்டம் திருநாள் மஹாராஜா மைதானத்தில் நகரம் முழுவதும் சேகரமாகும் மண்குவியல்கள் கொட்டப்பட்டு, மைதானம் நிரம்பி காணப்பட்டதால், மேயர் அவர்களும் ஆணையர் அவர்களும் கள ஆய்வு மேற்கொண்டபோது, மண் குவியலினால் மைதானம் உபயோகப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் உடனேயே அம்மண் குவியல்களை அப்புறப்படுத்த தெரிவித்தனர். அவ்வாறு அந்த மைதானத்தில் கொட்டி வைக்கப்பட்ட மண் குவியலினை அம்மைதானத்தின் எதிரேயுள்ள சரலூர் மாட்டுச்சந்தையில் வணிகவியல் கட்டடம் கட்ட உள்ளதால் அதன் பள்ளமான இடத்தில் கொட்ட உத்தரவிடப்பட்டது. மேலும் வலம்புரிவிளை உரக்கிடங்கின் மத்திய பகுதியில் அந்த மண்ணினை கொட்டி ஒரு புதிய பாதை உருவாக்க உத்தரவிடப்பட்டது.

அவ்வாறு மேற்கூறிய மைதானத்திலிருந்து மேற்படி சரலூர் மாட்டுச்சந்தையின் தாழ்வான பகுதியிலும் வலம்புரிவிளை உரக்கிடங்கின் மத்தியிலும் மண்ணினை மாற்றி கொட்டுவதற்கும் எவரும் தானாக முன்வரமாட்டார்கள். கூலியின்றி எவரும் அப்பணியினை தனித்து செய்ய

இயலாது. எனவே அப்பணியினை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஜோசப் அருள்ராஜ், மணிகண்டன், கைலாஷ்குமார் ஆகியோர் முறையே ரூபாய் 24,75,720/–, 23,80,500/–, 20,35,327/– கோரினார்கள். அதில் கைலாஷ்குமார் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்ததால் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி ரூ.19,13,287.20/– என சம்மதித்து ஒப்பந்தம் போடப்பட்டது. பின்னர் மேற்படி நபருக்கு மாமன்ற தீர்மானம் எண்.481 நாள் 30.08.2022ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டது.

அந்த பணி உத்தரவின்படி மேற்படி கைலாஷ்குமார் மேற்படி மைதானத்திலிருந்து மொத்தம் 15866.42 Cu.m.(5606.50 யூனிட்) மண்ணை அப்புறப்படுத்தி மேலே குறிப்பிட்டுள்ளபடி சரலூர் மாட்டுச்சந்தையிலும், வலம்புரிவிளையிலும் கொட்டி சமன்படுத்தினார். அதற்கு அவருக்கு மொத்தம் ரூ.18,70,395/– 18.11.2022 அன்று கொடுக்கப்பட்டது. மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய மனுவிற்கு உரிய பதில் கொடுக்கப்பட்டது.

பொது இடத்திலிருந்து எடுக்கப்பட்ட மண் பொது சொத்து என்பது மறுக்கப்படாத உண்மை. அந்த மண் பொது இடத்தில் தான் கொட்டப்பட்டுள்ளது. அவ்வாறு கொட்டுவதற்கு கூலி கொடுக்காமல் எவரும் இலவசமாக அப்பணியினை செய்து தர மாட்டார்கள். எனவே தான் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. அதில் எவ்வித நிதி இழப்பும் ஏற்படவில்லை. மாநகராட்சிக்கு மண்ணை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய மாநகராட்சி சட்டவிதிமுறைகளின்படி அதிகாரமில்லை. அவ்வாறு விற்பனை செய்வது சட்டத்திற்கு புறம்பானதாகும். சட்டத்திற்கு புறம்பான செயல்களை செய்து மாநகராட்சி வருவாய் ஈட்ட இயலாது. மனுதாரர் கூறியிருப்பது போல அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் கலைவாணர் கலையரங்கத்தில் மாநகராட்சியின் புதிய கட்டிடம் கட்ட அவ்விடத்தை சமன்படுத்த 814.61 யூனிட் மண் தேவைப்பட்டது. அந்த 814.61 யூனிட் மண்ணை மாநகராட்சி செலவு செய்து வாங்கவில்லை. சாலை பராமரிப்பின்போதும், பாதாள சாக்கடை தோண்டப்பட்டபோதும் கிடைக்கபெற்ற மண்ணினை அப்பணி செய்த ஒப்பந்ததாரர்கள் வாயிலாக நேராக புதிய கட்டிடம் கட்டப்பட்ட இடத்தில் கொட்டப்பட்டது. அந்த ஒப்பந்ததாரர்களுக்கு அதற்கான conveyance கூலி மட்டும் கொடுக்கப்பட்டது. நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் எவ்வித நிதி இழப்பையும் ஏற்படுத்தவில்லை என தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் 2014–ல் உள்ள கீழ் குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவுகளின்படியும்,

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7( c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், மற்றும்

பிரிவு 12. (1 ) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely :-

( c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரரால் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்ட முறைகேடுகள் குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை சிறப்பு ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினை 3 மாத காலத்திற்குள் மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் அவ்வறிக்கையில் ஏதேனும் முறைகேடு நடைபெற்றதாக குறிப்பிடப்படுமேயானால் அந்த முறைகேட்டிற்கு காரணமான சம்மந்தப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. மோ.பி.தனுஷ்குமார்,
   13/7, பட்டாரிலர் கோவில் தெரு,
   இடலாக்குடி,
   கன்னியாகுமரி – 2.
2. ஆணையர்,
   நாகர்கோவில் மாநகராட்சி,
   நாகர்கோவில்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
4. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
   571, அண்ணாசாலை,
   நந்தனம்,
   சென்னை – 600 035.
5. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

19